Deposition of witness

(Chapter XXIII Code of Civil Procedure)
In the court of Subordinate Judge, Vaniyamabdi, Vellore District.

| | |
|---|---|
| Name | N.Murugan |
| Fathers Name | C.Natarajan |
| Village | 42 Sevvathur |
| Taluk | Tirupattur |
| Caste | Kurumbar |
| Calling | VAO |
| Religion | Hindu |
| Age | 41 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.01.2019.

**OS.170/2015 PW4 Name:Tr.N.Murugan**

**முதல் விசாரணை**

நான் 42 செவ்வாத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிவருகிறேன். எங்கள் கிராம பட்டா எண்கள்.61, 1442, 807, மற்றும் 265 பசலி 1393-க்கு உண்டான சிட்டாக்கள் புல எண்.1177/1ஏ , 1177/2, 1178/2ஜி, 1122/1 பி, 1118/1ஏ, 1122/1ஏ, 1121/1ஏ ஆகியவற்றின் அ பதிவேடு மேற்படி புல எண்களின் செக்குபந்தி வீரபோயன் என்பவரது வாரிசு விபரம் மேற்படி பட்டாக்களின் எண்களின் கணினி சிட்டா, வீரபோயனின் கொடிவழி சான்று பட்டியல் , மேற்படி பட்டாக்களுக்கு உண்டான நிலவரி ரசீது நகல்கள், 1393 பசலியில் பட்டா எண் 61 ஆனது வீரபோயன் மனைவி அங்காயம்மாள் பெயரில் உள்ளதா என்றால் அங்கம்மாள் என்றுதான் பெயர் உள்ளது. சிட்டா ஆவணத்தில்

கைலாசம் என்பவரது பெயரில் பெயர் மாற்றம் 1203.2007-ல் செய்ததற்கு வட்டாட்சியர் மேற்குறிப்பு எதுவும் இல்லை. எங்களது அலுவலக ஆவணங்களின் படி அடமானம் செய்யப்பட்டது என்று காண்பிக்க குறீப்பு எதுவுமில்லை. மேற்படி 4 பட்டாவின்படி 8.47 ஏக்கர் என்று குறிப்பு உள்ளது. 1393 பசிலியானது 1986ஆம் வருடத்திற்குண்டானது. மேற்படி ஆண்டுதான் சிட்டா எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சாதாரணமாக வங்கியில் கடன் பெறுவதற்கு எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் நிலஉடைமை ஆவணங்களின் படி சான்று வழங்குவோம். சாதாரணமாக சொத்து மதிப்பு பெறுவதற்கு சொத்தின் உரிமையாளர்கள் வட்டாட்சியரிடம் மனு கொடுப்பார்கள் என்றால் ஆமாம். சிட்டாவில் யார் பெயரில் நில உரிமை உள்ளதோ அவர் பெயரில்தான் மதிப்பு ஆவணம் பெறுவதற்கு பரிந்துரைக்கப்படும். சொத்தின் மதிப்பை குறிப்பிடுவதற்கு கிராம நிர்வாக அதிகாரியும் வருவாய் அலுவலரும் புல தணிக்கை மேற்கொள்வோம். பட்டா எண் 61-ன் படி சர்வே எண்.1177/1எ , 44ஏர்ஸ் ஆகும். 1177/2 68 ஏர்ஸ் . சர்வே எண்.1178/2 ஜி 271/2 ஏர்ஸ். மொத்தம் 1.39.5 ஏர்ஸ். மேற்படி சொத்தில் தற்பொழுது பெத்தபோயன் மனைவி ராஜம்மாள் அவரது குடும்பத்தார்கள் குடியிருந்துவருகிறார்கள். தற்பொழுது தேதியில் மேற்படி பட்டா 61 , 265 , -க்கு உண்டான கணினி சிட்டா கைலாசம் பெயரில் உள்ளது. பட்டா எண்.1442 கூட்டுபட்டாவாக உள்ளது. பட்டா எண்.807 பெத்தபோயன் பெயரில் உள்ளது. இந்த ஆண்டு நிலவரியானது யார் பெயரில் நிலபதிவேடு உள்ளதோ அவர் பெயரில் வசூலிக்கப்பட்டிருக்கும். கிருஷ்ணன் என்பவர் எங்களது ஆவணங்களின் படி செவ்வாத்தூர் புதூர் கிராமத்தில் குடியிருப்பு இல்லை. கணினி சிட்டா எக்ஸ்.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14-வது பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை.,

1990 ஆம் ஆண்டு இந்த சொத்துக்கள் சம்மந்தமாக யாருக்காவது சொத்து மதிப்பு சான்று வழங்கப்பட்டுள்ளதா என்றால் வட்டாட்சியர் அலுவலக ஆவணங்களில் தான் தெரியும்.

1 ஆம் பிரதிவாதி தர்ப்பில் குறுக்குவிசாரணை.,

சாதாரணமாக பட்டா மாறுதல் செய்யவேண்டுமென்றால் வட்டாட்சியரின் உத்தரவின்பேரில்தான் செய்யப்படும் என்றால் ஆமாம். அவ்வாறு பெயர் மாற்றுதல் செய்யும்போது வட்டாட்சியர் உத்தரவு T.A. எண் மற்றும் தேதி சிட்டா குறிப்பேடு குறிப்பிடப்படும் என்றால் ஆமாம். சாதாரணமாக நிலஉரிமை பட்டாதாரர் காலமாகிவிட்டால் அவரது வாரிசுகள் பெயர்கள் சேர்க்க மனு அளித்தால்தான் பெயர் சேர்க்கப்படும் என்றால் ஆமாம். சாதாரணமாக கிரையம் பெற்ற நபர் கிரைய ஆவணத்தின் நகலை ஒப்படைத்து மனு தாக்கல் செய்தால் உரிய விசாரணைக்கு பின்னிட்டு பெயர் சேர்க்கப்படும் என்றால் சரி. பட்டா பாஸ் புத்தகத்தில் அடமானம் செய்வது உண்டான குறிப்பு குறிப்பிடவேண்டும் என்ற சட்டம் எந்த ஆண்டு அமுலுக்கு வந்தது என்று எனக்கு தற்பொழுது தெரியவில்லை. பட்டா பாஸ் புத்தகம் சட்டம் எந்த ஆண்டு அமுலுக்கு வந்தது என்றும் தற்பொழுது எனக்கு தெரியவில்லை.